1981 ஜனவரி 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மற்றும்

(ஆ) ஆத்தூரில் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் அமைப்பதற்கான ஆணை உள்துறையின் 6.9.1980 ஆம் நாளிட்ட 2306 எண்ணுள்ள அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 1973 ஆம் ஆண்டு நீதிமன்றங்களின் அதிகார வரம்புக் குழுவின் பரிவுரைக்கேற்ப புதிய மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன.

திரு. சி. பழனிமுத்து: 6–11–80ல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் நிறுவப்பட்டு நடைபெறுகிறது. அந்த நீதிமன்றத்தில் எல்லா அதிகாரிகளும் பணியாளர்களும் நியமிக்கப்பட்டு விட்டார்களா? மாவட்ட முன்சீப் நீதிமன்ற நீதிபதிக்கு குடியிருப்பு கட்டித் தரப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நீதிபதி அவர்களுக்கு குடியிருப்பு கட்டித் தரக்கூடிய செயற்குறிப்பு இல்லை. பணியாளர்கள் அமர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.

முன்னோடி வங்கித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள்

*வினா எண். 71—திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் Lead Bank—திட்டத்தின் மூலம் விவசாயம், சிறுதொழில் ஆகியவற்றிற்கு இதுவரை எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) குறைவாக இருப்பின் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் முன்னோடி வங்கி (Lead Bank) திட்டத்தின் மூலம் விவசாயம், சிறுதொழில் ஆகியவற்றிற்கு கீழ்க்கண்டவாறு வணிக வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் கடன் ஒதுக்கீடுக்கு அதிகமாகவே கடன் வழங்கியுள்ளன.

	விவசாயம்			தொழில்		
	ஒதுக்கீடு	சாதனை	விழுக்காடு	ஒதுக்கீடு	சாதனை	விழுக்காடு
1. வணிக வங்கிகள்	1152.11	1499.73	130%	718.32	1598.22	202%
2. கூட்டுறவு வங்கிகள்	698.75	872.75	125%	837.50	1064.09	127%

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

[1981 ஜனவரி 28

திரு. உ. சுப்பிரமணியன்: அங்கு மூன்று ஆண்டுகளில் ஏறக் குறைய 80 கோடி ரூபாய் நான்கு சதவிகித வட்டியில் கடன் வழங்க வேண்டுமென்ற திட்டம் வகுக்கப்பட்டது. இங்கே அமைச்சர் அவர்கள் சொன்னது அந்த அளவுக்கு இல்லை. அந்த மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டம். அதிகமான அளவில் லீட் பாங்கு மூலம் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் கடன் வழங்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தொழிற்துறையைப் பொறுத்தவரை இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு போன்றவை தாராளமாக கடன் உதவி தர முன்வருகின்றன. அதில் குறை இருப்பதாகத் தெரியவில்லை. விவசாயத்திற்கு அதிகப்படியாகக் கடன் உதவி தர வேண்டுமென்ற கோரிக்கை எழும்போது பெரிய அளவுக்கு நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள் தருவதில்லை. தொழிலுக்கு கடன் தருவது போல் விவசாயத்திற்குத் தராத நிலையைக் கடைப்பிடிக்கிறது. இதுபற்றி மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துக் கூறியிருக் கிறது. கிராம விவசாய முன்னேற்றம், பொருளாதார முன் னேற்றம் ஆகியவற்றைக் கருதி கூட்டுறவு வங்கிகளின் மூலம் அதிகப்படியாக கடன் தர வழிவகை செய்யப்படுகிறது. டெவலப்மென்ட் ஆக்டிவிடிசுக்கு எல். டி. பாங்கு மூலம் அதிகப் படியான கடனைத்தர செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: அந்தப் பகுதியில் தொடர்ந்தாற் போல் மூன்று ஆண்டுகள் வறட்சியாக இருந்த காரணத்தால் விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டமுடியவில்லை. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற நிலையில் பார்க்கும்போது வங்கிகள் கடன் கொடுக்க மறுப்பது நியாயம் இல்லையென்று தெரிகிறது. மத்திய அரசுக்கு மாநில அரசு எழுதியிருப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு மீண்டும் எழுதவேண்டிய அவசியம் என்ன?

[முற்பகல்—9.50]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற திட்டம் வேறு, நான் சொன்ன பதிலின் கருத்து வேறு. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் தொழிற் துறைக்கும் வியாபாரத் துறைக்கும் கடன் கொடுப்பது போன்று விவசாயத் துறைக்கு கடன் கொடுக்க முன்வருவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டினேன். அதிகப்படியாக லீட் வங்கிகள் மூலமாக விவசாயி களுக்குக் கடன் உதவிகள் செய்யவேண்டுமென்பது குறித்து மைய அரசு மூலமா நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் வலியுறுத் தப்படும் என்பதைத்தான் நான் சொன்னேன்.